பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

12 02 2025 6 45

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- பொருளாதார சீர்திருத்தங்கள் மற்றும் அரசின் நிலையான கொள்கைகள் காரணமாக உலகின் முதலீட்டு மையாக இந்தியா உருவெடுத்துள்ளது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- உலகின் வேகமாக வளரும் பொருளாதார நாடாக இந்தியா தொடர்ந்து திகழும் என்று நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.
- மத்திய அரசின் உயர் கல்வி நிறுவனங்களில் சேர்வதற்கான JEE நுழைவுத் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளது.
- கல்விக் கடன், விவசாயக் கடன் ரத்து உள்ளிட்ட தேர்தல் வாக்குறுதிகளை திமுக அரசு நிறைவேற்றவில்லை என்று பிஜேபி மாநில தலைவர் திரு. அண்ணாமலை கூறியுள்ளார்.
- உத்தராகண்டில் நடைபெறும் தேசிய விளையாட்டுப் போட்டியின் ட்ரிபிள் ஜம்ப் மற்றும் Sabre பிரிவுகளில் தமிழக வீரர்கள் தங்கப்பதக்கம் வென்றுள்ளனர்.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

பொருளாதார சீர்திருத்தங்கள் மற்றும் அரசின் நிலையான கொள்கைகள் காரணமாக உலகின் முதலீட்டு மையாக இந்தியா உருவெடுத்துள்ளது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ஃபிரான்ஸ் தலைநகர் பாரீசில் இந்தியா - ஃபிரான்ஸ் தொழில்துறை தலைமைச் செயல் அதிகாரிகளின் 14வது கூட்டத்தில் பேசிய அவர், காப்பீட்டுத் துறையில் 100 சதவீத அன்னிய நேரடி முதலீட்டிற்கு அனுமதி அளிக்கப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டினார்.

இதேபோன்று அணுசக்தி துறையிலும் தனியார் அனுமதிக்கப்பட்டிருப்பதுடன், தொழில் தொடங்குவதை எளிதாக்கும் வகையில் வரி கட்டமைப்பு எளிதாக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

நாட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குமுறை சீர்திருத்தங்கள் இந்தியாவில் பொருளாதார ஆளுகையை மிகவும் நம்பிக்கையான மற்றும் திறமையானதாக மாற்றி இருப்பதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

எனவே பாதுகாப்பு, எரிசக்தி, விமானப் போக்குவரத்து, விண்வெளி, நிதி தொழில்நுட்பம் மற்றும் சுகாதார சேவை துறைகளில் புதிய முதலீடுகளை மேற்கொள்ளுமாறும் ஃபிரான்ஸ் தொழில் நிறுவனங்களுக்கு திரு. நரேந்திர மோடி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முன்னதாக செயற்கை நுண்ணறிவு மாநாட்டின் இடையே அமெரிக்க துணை அதிபர் J.D. Vance-ஐ சந்தித்துப் பேசிய பிரதமர், இருதரப்பு ஒத்துழைப்பு உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து அவருடன் விவாதித்தார்.

எஸ்டோனியா அதிபர் Alar Karis உடனும் பிரதமர் பேச்சுவார்த்தை நடத்தினார்.

<<<<>>>>

உலகின் வேகமாக வளரும் பொருளாதார நாடாக இந்தியா தொடர்ந்து திகழும் என்று நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

மக்களவையில் பட்ஜெட் மீதான விவாதத்திற்கு பதிலளித்துப் பேசிய அவர், உலக அளவில் நிச்சயமற்ற பொருளாதார சூழல் நிலவி வரும் வேளையில் இந்த பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டினார்.

அரசு வாங்கும் கடன் தொகையில் 99 சதவீதத்தை மூலதன செலவுகள் மற்றும் மூலதன சொத்துக்களை உருவாக்கவும் தான் பயன்படுத்துவதாக அவர் குறிப்பிட்டார்.

அரசின் மூலதன செலவுகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4 புள்ளி 3 சதவீதமாகவும், நிதிப்பற்றாக்குறை 4 புள்ளி 4 சதவீதமாக உள்ளது என்றும் நிதியமைச்சர் தெரிவித்தார்.

இந்த பட்ஜெட் நாட்டின் வளர்ச்சிக்கான தேவைகள் மற்றும் நிதி முன்னுரிமைகளை சமன் செய்வதாக உள்ளது என்றும் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

அதிநவீன ராணுவ தளவாட கண்டுபிடிப்பு மற்றும் உற்பத்தியில் இந்தியாவுடன் இணைந்து பணியாற்ற முன்வருமாறு உலக நாடுகளுக்கு பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பெங்களூருவில் நடைபெற்று வரும் ஏரோ இந்தியா விமான கண்காட்சியின் இடையே பல்வேறு நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்களின் கூட்டத்தில் பேசிய அவர், தற்போதைய உலகளாவிய பாதுகாப்பு நிலைமையை எதிர்கொள்ள புதுமையான அணுகுமுறைகளை பின்பற்றுவதுடன் வலிமையான ஒத்துழைப்புகளை மேற்கொள்வதும் அவசியம் என்றார்.

இந்தக் கூட்டத்தில் 81 நாடுகளைச் சேர்ந்த 26 அமைச்சர்கள் உட்பட 162 பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

<<<<>>>>

தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் சீர்திருத்தங்கள் சமூக, பொருளாதார அளவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதாக மத்திய இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் பொது நிர்வாகம் தொடர்பான மாநாட்டில் தொடக்க உரையாற்றிய அவர், இந்தியா வேகமான பொருளாதார வளர்ச்சியை கண்டிருப்பதாக குறிப்பிட்டார்.

இந்த மாநாட்டை முதல் முறையாக இந்தியா நடத்துவதை சுட்டிக்காட்டிய திரு. ஜிதேந்திர சிங், தெற்காசியாவில் இந்த மாநாட்டை நடத்தும் முதல் நாடாகவும் இந்தியா உள்ளதாக கூறினார்.

'அடுத்த தலைமுறை நிர்வாக சீர்திருத்தங்கள் – கடைக்கோடி மக்களையும் சென்றடைதல்' என்பதே இந்த ஆண்டின் மாநாட்டு மையக் கருத்தாக உள்ளது.

<<<<>>>>

ஐ.ஐ.டி, என்.ஐ.டி உள்ளிட்ட மத்திய அரசின் உயர் கல்வி நிறுவனங்களில் பொறியியல் பட்டப் படிப்பில் சேர்வதற்கான JEE நுழைவுத் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளது.

தேசிய தேர்வு முகமையால் கடந்த மாதம் நடத்தப்பட்ட இந்தத் தேர்வில் பங்கேற்ற 12 லட்சத்து 58 ஆயிரத்து 136 மாணவர்களில், 14 பேர் 100 மதிப்பெண் பெற்று தேசிய அளவில் முதலிடம் பிடித்துள்ளனர்.

இவர்களில் 12 பேர் பொதுப்பிரிவையும், இதர பிற்படுத்தப்பட்ட மற்றும் ஷெட்யூல்டு வகுப்பைச் சேர்ந்த தலா ஒருவரும் அடங்குவார்கள்.

இந்தத் தேர்வில் முறைகேடுகளில் ஈடுபட்டதாகக் கூறி 39 பேரின் முடிவுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

<<<<>>>>

சென்னை பெசன்ட் நகர் எலியட்ஸ் கடற்கரையல் மாற்றுத்திறனாளிகளுக்கான் பிரத்யேக மரப்பலகை பாதையை துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஒரு கோடியே 61 லட்சம் ரூபாய் செலவில் இந்தப் பாதை அமைக்கப்பட்டுள்ளது என்றார்.

மேலும் மாற்றுத்திறனாளிகளின் வாகனங்கள் மற்றும் சக்கர நாற்காலிகளை நிறுத்துவதற்கான வசதியும் செய்யப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

முன்னதாக சென்னை நுங்கம்பாக்கம் காம்தார் நகர் முதன்மைச் சாலைக்கு பிரபல பின்னணிப் பாடகர் எஸ்.பி. பாலசுப்ரமணியம் சாலை என பெயர்சூட்டுவதற்கான பெயர்ப்பலகையையும் திரு. உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்.

<<<>>>

திருவள்ளூர் மாவட்டம் பருத்திப்பட்டு – திருவேற்காடு இடையே கூவம் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள உயர்மட்ட பாலத்தை நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. எ.வே. வேலு நேற்று திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், மழை வெள்ள காலங்களில் இப்பகுதி மக்கள் ஆற்றைக் கடந்து செல்வதில் ஏற்பட்ட சிரமத்தைப் போக்கும் வகையில் சுமார் 18 கோடி ரூபாய் செலவில் இந்த உயர்மட்டப் பாலம் அமைக்கப்பட்டுள்ளது என்றார்.

சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு. சா.மு. நாசர் உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

<<<>>>

கல்விக் கடன் ரத்து, விவசாயக் கடன் ரத்து, செவிலியர்கள் பணி நியமனம், அரசுப் பணியாளர்கள் பணி நிரந்தரம் போன்ற தேர்தல் வாக்குறுதிகளை திமுக அரசு நிறைவேற்றவில்லை என்று பிஜேபி மாநில தலைவர் திரு. அண்ணாமலை கூறியுள்ளார்.

பழனியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சமக்ர சிக்ஷா கல்வித் திட்டத்தின்கீழ் தமிழகத்திற்கு மத்திய அரசு நிதி ஒதுக்கவில்லை என்ற மாநில பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி கூறியிருப்பது முற்றிலும் தவறானது என்றார்.

மேலும் தைப்பூசத்தை ஒட்டி பழனிக்கு வரும் பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்துதரப்படவில்லை என்றும் திரு. அண்ணாமலை குற்றம் சாட்டினார்.

<<<>>>

காதலர் தினத்தை முன்னிட்டு கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ரோஜா மலர் அறுவடை மற்றும் ஏற்றுமதி பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகிறது.

கடுமையான பனிப்பொழிவு காரணமாக இந்த ஆண்டு உற்பத்தி குறைந்துள்ளபோதிலும், விற்பனை அதிகரிக்கும் என எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<>>>

*__இருவரிச் செய்திகள்__*

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப வளர்ச்சி புவி அரசியல் பிளவுகளை அதிகரிக்கச் செய்யும் அபாயம் உள்ளதாக ஐ.நா. பொதுச் செயலாளர் திரு. ஆண்டனியோ குட்ரெஸ் கவலை தெரிவித்துள்ளார்.

------------

எஃகு மற்றும் அலுமினியப் பொருட்கள் இறக்குமதி மீது அமெரிக்கா விதித்துள்ள கூடுதல் வரியால் ஏற்படும் பாதிப்புகளை குறைப்பதற்கான வழிமுறைகளைக் கண்டறியுமாறு தென்கொரிய தொழில்துறையினரை அந்நாட்டு அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

------------

துபாயில் நடைபெற்ற உலக அரசாங்க உச்சிமாநாட்டில் புதுதில்லியைச் சேர்ந்த கணினி அறிவியல் மாணவர்கள் சிறந்த நிர்வாக செயலியை கண்டுபிடித்ததற்காக வெண்கல விருது பெற்றுள்ளனர்.

------------

ஜம்மு-கஷ்மீரில் அக்னூர் பகுதியில் ஏற்பட்ட கன்னிவெடி விபத்தில் ராணுவ வீரர்கள் இருவர் உயிரிழந்தனர்.

------------

மதுரை அருள்மிகுமீனாட்சி அம்மன் கோவில் தெப்பத் திருவிழா கோலாகலமாக நடைபெற்றது.

------------

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகேயுள்ள கந்தசாமிபுரத்தில் மக்கள் தொடர்பு முகாம், ஆட்சியர் திரு. இளம்பகவத் தலைமையில் இன்று நடைபெறுகிறது.

------------

தைப்பூசத்தை ஒட்டி காஞ்சிபுரம் மாவட்டம் வல்லக்கோட்டை சுப்ரமணிய சுவாமி கோவிலில் ஏராளமான பக்தர்கள் நேர்த்திக்கடன் செலுத்தினர்.

------------

*விளையாட்டுச் செய்திகள்*

உத்தராகண்டில் நடைபெற்று வரும் தேசிய விளையாட்டுப் போட்டியின் ட்ரிபிள் ஜம்ப் பிரிவில் தமிழ்நாட்டின் ப்ரவீன் சித்ரவேல் தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

ஆடவர் வாள்வீச்சு Sabre பிரிவிலும் தமிழகத்தின் Nidhi Gisho தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

முன்னதாக டென்னிஸ் கலப்பு இரட்டையர் பிரிவிலும் தமிழக வீரர்கள் தங்கம் வென்றனர்.

பதக்கப் பட்டியலில் சர்வீசஸ் அணி 54 தங்கம் உள்ளிட்ட 97 பதக்கங்களுடன் தொடர்ந்து முதலிடம் வகிக்கிறது.

22 தங்கம், 26 வெள்ளி, 27 வெண்கலம் என 75 பதக்கங்களுடன் தமிழகம் 6ஆம் இடத்தில் உள்ளது.

-------------

ஐ.சி.சி. சாம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டியில் வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பும்ரா காயம் காரணமாக இடம்பெறமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அவருக்கு பதிலாக ஹர்ஷித் ராணா சேர்ககப்பட்டுள்ளார். இந்த அணியில் வருண் சக்ரவர்த்தியும் இடம்பெற்றுள்ளார்.

<<<<The End>>>>